සියලු ම හිමිකම්ඇව්රිනි ]
முழுப் பதிப்புரிமையுடை.யது ]
All Rights Reserved]

බස්නාහිර පළාත්අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - කොළඹ අධ්‍යාපනකලාපය
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் - கொழும்புகல்விவலயம்
Western Provincial Education Department - Colombo Educational Zone

දෙවන වාර ඇගයීම -2018
இரண்டாம் தவணைமதிப்பீடு - 2018
**Second Term Evaluation -2018**

| | | |
|---|---|---|
| 8ශ්‍රේණිය<br>தரம் 8<br>Grade 8 | සෞඛ්‍යයහාශාරීරිකඅධ්‍යාපනයI හාIIපත්‍රය<br>சுகாதாரமும் உடற்கல்வியும்வினாத்தாள்-1<br>Health & Physical Education Paper I & II | පැයදෙකයි<br>இரண்டுமணித்தியாலங்கள்<br>Two Hours |

- **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**
- **வினாவெண் 1 தொடக்கம் 20 வரைக்குமான சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01. மனவெழுச்சிமிக்க நபரிடத்தே காணப்படக்கூடிய குணவியல்
    1. மற்றவரின் வெற்றியைக் கண்டு அஞ்சுவார்.
    2. மற்றவரை தோல்வியடையச் செய்வார்.
    3. மற்றவர்களை ஏளனஞ் செய்வார்.
    4. சவால்களுக்கு தைரியமாக முகங்கொடுப்பார்.

02. மனவெழுச்சி நிலைகளுக்கு தாக்கம் ஏற்படுத்தக்கூடிய காரணியாக கூறக்கூடியது
    1. பெற்றோர்  2. ஆசிரியர்கள்
    3. தியாகம்  4. அர்ப்பணிப்பு

03. அணிநடையின் போது, மரியாதை செலுத்திய பின்னர் முன்னால் பார் (Eyes front) என கட்டளை இடுபவர் யார்?
    1. அணிநடை குழுவின் தலைவர்  2. முன் வரிசையின் வலதுபக்க வீரர்
    3. முன் வரிசையின் இடதுபக்க வீரர்  4. கடைசி வரிசையின் இறுதி நபர்

04. பாடசாலை சிற்றுண்டிச்சாலையில் காணக்கூடிய **"போசணை மிகு"** உணவானது
    1. டோனட்  2. அவித்த கடலை
    3. அச்சாறுகலவை  4. இடியப்பம்

05. பாடசாலை சுகாதார மேம்பாட்டிற்காக நீர் செய்யக்கூடிய காரியமாகக் கூறக்கூடியது
    1. பாடசாலை சட்டதிட்டங்களைக் கடைப்பிடியாமை
    2. பாடசாலை வேலை திட்டங்களுக்கு பெற்றோரின் பங்களிப்பை வழங்காமை
    3. சுகாதாரம் பற்றிய விடயங்களைவீட்டாருக்குத் தெரியப்படுத்துவது
    4. வகுப்பறை வேலைகளில் மட்டும் ஈடுபடுவது

06. வழி(Lead up game) விளையாட்டுக்குரிய பண்பாகக் கூறக்கூடியது
    1. சிக்கலான சட்டதிட்டங்கள் உண்டு
    2. சர்வதேசரீதியாக ஒழுங்கமைப்பு காணப்படும்
    3. உபகரணங்களின்றி விளையாடப்படும்
    4. உள்ள வசதிகளுக்கேற்ப விளையாட்டு ஒழுங்கமைக்கப்படும்


kalvi.lk

07. வலைப்பந்து விளையாட்டொன்று ஆரம்பமாவது

1. அறைதலின் மூலம்
2. எறிதல் மூலம்
3. பணித்தலின் மூலம்
3. மத்திய பிரதேச எறிகை மூலம்

08. நீளம் பாய்தலில் உள்ள நான்கு படிமுறைகளில் மூன்றாவது படிமுறையாக கூறக்கூடியது

1. ஓடுதல்
2. மிதித்தெழல்
3. நிலம்படல்
4. பறக்கைநிலை

09. “கருக்கட்டல்” நிகழ்வது

1. கருப்பை கழுத்துப் பகுதியில்
2. சூலகத்தினுள்
3. கருப்பையினுள்
4. பலோப்பியன் குழாயினுள்

10. பாலியல்பு மூலமாக பரவும் நோயாகக் கூறக்கூடியது

1. கயரோகம்
2. சிபிலிசு
3. தொழுநோய்
4. ஜேர்மன் சின்னமுத்து

11. பாடசாலை மட்டத்தில் காணமுடியாத மெய்வல்லுனர் நிகழ்ச்சியானது

1. 200m
2. சம்மட்டி எறிகை
3. முப்பாய்ச்சல்
4. 110m தடைதாண்டல்

12. முளையத்தின் விருத்திக்கு அவசியமான ஒட்சிசன் எதன் மூலமாக பெறப்படுகின்றது

1. சூலக அணுக்கள் மூலமாக
2. தொப்புள் கொடி மூலமாக
3. பலோப்பியன் குழாய் மூலமாக
4. விதைகள் மூலமாக


13. உலகிலேயே மிகவும் பிரபல்யம் பெற்ற விளையாட்டாக கூறக்கூடியது

1. வொலிபோல்
2. காற்பந்து
3. கிறிகெற்
4. றகர்

14. வொலிபோல் திடலொன்றின் நீள, அகலங்கள் முறையே காட்டப்பட்டிருப்பது

1. 16m – 9m
2. 18m – 9m
3. 18m – 6m
4 9m – 16m

15. வரைபடத்தில் வெற்றிடத்திற்குரிய விடையானது




1. பந்து பரிமாறும் முறை
2. இரு கரத்தாலும் பந்தை பரிமாறும் முறை
2. தனிக்கரத்தால் பந்தை பரிமாறல்
4. பந்தை பிடித்தல் முறைகள்

16. நின்று புறப்படுகை முறையின் மூலம் ஆரம்பிக்கப்படும் ஓட்டநிகழ்ச்சி எது?
1. 100m
2. 200m
3. 800m
4. 400m

17. பாடசாலையினுள் உள, சமூக பாதுகாப்பினை ஏற்படுத்தக்கூடிய முக்கிய காரணியாக கொள்ளக்கூடியது
1. பிரதான வாயிலை மூடிவிடுதல்
2. வகுப்பாசிரியர்
3. பாதுகாப்பான கிணறொன்றை அமைத்தல்
4. போசணை மிக்க உணவு

18. கட்டிளமை பருவதையுடைய நீர், சமூகத்தில் பெறுமதிமிக்க ஒருவராக திகழ மேற்கொள்ளக்கூடிய விடயமாவது

1. எதிர்பாலாருடன் சகோதரத்துவ முறையில் பழகாமை
2. ஆபாச புத்தகங்கள், சஞ்சிகைகள், இருவட்டுக்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது
3. போதை, மதுபானங்களிலிருந்து தவிர்த்திருத்தல்
4. மாதா, பிதாவை கனம் பண்ணுதல்

19. சகல விலங்கினங்களும் தமது இனத்தை விருத்தி செய்யும் தொழிற்பாடுகளை மேற் கொண்டுள்ளன. இதன் அடிப்படையில் ஆண், பெண் இனப்பெருக்கத்தொகுதிகள் அமைந்துள்ளன. இதன்படி ஆண் இனப்பெருக்கத் தொகுதியில் வெளியாக அமைந்துள்ள உறுப்பு
1. சுக்கிர புடகம்
2. வெளியேற்றும் குழாய்
3. விந்து உற்பத்தி செய்யும் விதை
4. சிறுநீர்வழி

20. கிடை, குத்து பாய்ச்சலுக்குரிய தொகுதியாகக் காணக்கூடியது எது?
1. நீளம் பாய்தல், கோலூன்றிப்பாய்தல்
2. உயரம் பாய்தல், தடை தாண்டல்
3. கோலுன்றிப் பாய்தல், உயரம் பாய்தல்
4. உயரம் பாய்தல், நீளம் பாய்தல்

## பகுதி - II

- **முதலாம் வினாவுடன் மேலும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

**01.**

1. சுகாதாரமான சூழலொன்றின் அவசியமொன்றைக் குறிப்பிடுக.
2. மனிதனின் அடிப்படைத் தேவையாக கூறக்கூடிய விடயமொன்று தருக.
3. எமது நாட்டிற்கு புகழைத்தேடிக் கொடுத்த வீர வீராங்கனைகள் இருவர் யாவர்?
4. அணிநடை நிகழ்வொன்று அவசியப்படும் சந்தர்ப்பம் ஒன்று கூறுக.
5. வொலிபோல் திடலொன்றின் நீள, அகலத்தைக் குறிப்பிடுக.
6. வலைப்பந்தாட்டமொன்றில் பந்து பரிமாறும் முறைகள் இரண்டினைக் கூறுக.
7. மெய்வல்லுனர் ஓட்ட ஆரம்ப முறைகள் இரண்டினைக் கூறுக.
8. இல்ல விளையாட்டுப் போட்டியொன்றில் அஞ்சலோட்டப் போட்டிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. மெய்வல்லுனர் ஓட்ட நிகழ்ச்சிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. பாய்தல் நிகழ்ச்சிகள் இரண்டைக் கூறுக.
11. பாலியல்பு மூலம் பரவும் நோய்கள் இரண்டடினைக் குறிப்பிடுக.
12. வொலிபோல் விளையாட்டொன்றில் அணியொன்றில் காணப்படும் வீரர்கள் எத்தனை பேர்?

**(1 X 12 = 12 புள்ளிகள்)**

**02.**

1. வழி விளையாட்டொன்றில் காணப்படும் விசேட பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. வழி விளையாட்டுக்களின் பிரிவுகளாகக் குறிப்பிடக்கூடியது எது? ஒரு உதாரணம் தருக.

3. வழி விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் வளர்ச்சியடையும் உடற்றகைமைகள் எவை?

**(4+4+4 = 12 புள்ளிகள்)**

**03.**

1. மெய்வல்லுனர் வகைப்படுத்தலுக்கேற்ப கிடைபாய்ச்சல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. நீளம் பாய்தல் திறன்முறைகள் (Styles) மூன்றினைக் குறிப்பிடுக.
3. நீளம் பாய்தல் திறன் ஒன்றின் படிமுறைகள் நான்கினையும் குறிப்பிடுக.

**(4+4+4 = 12 புள்ளிகள்)**


kalvi.lk

**04.**

1. ஆண், பெண் இனப்பெருக்கத் தொகுதிகளின் உறுப்புக்கள் இரண்டு விகிதம் குறிப்பிடுக.
2. ஆண் இனப்பெருக்கத் தொகுதியின் தொழிற்பாட்டுச் சிறப்பியல்புகள் மூன்றினை விளக்குக.
3. பெண் இனப்பெருக்கத் தொகுதியின் தொழிற்பாட்டு சிறப்பியல்புகள் மூன்றினை விளக்ககுக

**(4+4+4 = 12 புள்ளிகள்)**

**05.**

1. வொலிபோல் விளையாட்டின் திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக.
2. மேற்கை பணிப்பின் படிமுறைகள் மூன்றும் எவை?
3. வொலிபோல் விளையாட்டின் பந்தை பணித்தல், பந்தை உயர்த்துதல் தொடர்பான விதிமுறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

**(4+4+4 = 12 புள்ளிகள்)**

**06.**

1. வலைபந்தாட்டத்தில் பந்து பரிமாறல் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. வலைபந்தாட்டத்திலுள்ள திறன்கள் நான்கினை எழுதுக.
3. பந்து பரிமாற்றத்தின் போது நீர் கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டினைக் கூறுக

**(4+4+4 = 12 புள்ளிகள்)**

**07.**

1. அணிநடை அணிவகுப்பொன்றின் கொண்ணிலைகள் பற்றிய விடயங்களை கருத்திற் கொண்டு விடையளிக்குக.
2. அணிவகுப்பொன்றின் போது நிகழ்த்தப்படும் திரும்பல் முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. முன்செல்லல் (Forward March) இன்போது உள்ள பிரதான வேறுபாடு யாது?
4. அணிநடை வகுப்பொன்றின் பிரதான திசைகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

**(4+4+4 = 12 புள்ளிகள்)**


kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**